**செ. கு. எண்:147** **நாள்: 08.11.2019**

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

# அவர்களின் அறிக்கை – 8.11.2019

**மதுரை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில்** உள்ள வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து வைகை அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடுமாறு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, மதுரை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள வைகை பூர்வீக பாசனப்பகுதி III-க்கு **9.11.2019** முதல் **16.11.2019** வரை உள்ள 7 நாட்களுக்கு **1441** மில்லியன் கன அடியும், வைகை பூர்வீக பாசனப்பகுதி II–க்கு **17.11.2019** முதல் **21.11.2019** வரை 4 நாட்களுக்கு **386** மில்லியன் கன அடியும், **22.11.2019** முதல் **25.11.2019** வரை மூன்று நாட்களுக்கு **48** மி.க.அடியும் பகுதி I-யை சார்ந்த நான்கு கண்மாய்களுக்கு, விரகனூர் மதகணையில் வழங்கவும் மற்றும் வைகை பூர்வீகபாசனப்பகுதி I–க்கு **26.11.2019** முதல் **2.12.2019** வரை **240** மில்லியன் கனஅடி தண்ணீரை வைகை அணையிலிருந்து திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

மதுரை, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள **1,36,109 ஏக்கர்** நிலங்கள் நேரடி மற்றும் மறைமுக பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**